**கொலன்னாவை நகர சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலன்னாவை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181(I) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொலன்னாவை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைப்பாடுகள் தொடர்பில் விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஓப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் 3.29 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (நடைமுறை வேலைகள் உட்பட) கொள்வனவு ரூபா 98,629,078 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 110,191,846 என ரூபா 11,562,768 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதாக | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) நியமத்தின் 3.29 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த ரூபா 15,700 முதலீடு செயற்பாடுகளின் சீராக்கப்படா திருந்ததுடன் சொத்துக்கள் கையகற்றல் நட்டம் ரூபா 552,982 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) ஆண்டுக்கான பெறுமானத் தேயவு ரூபா 53,303,651 ஆக இருந்த போதும் நியமத்தின் இலக்கம் 3.32 இன் பிரகாரம் அது காசு பாய்ச்சல் கூற்றிற்கு ரூபா 53,272,266 என ரூபா 31,385 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் பிரகாரம் முதலீட்டு வருமானம் ரூபா 23,443,578 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 64,530,340 தொகை கட்டிட கணக்கிற்டு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2024/JE/2 மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இயந்திர கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 162,166 ஆன தொட்டிகள் மற்றும் உபகரண கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2024/JE/2 மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 319,691 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | - மேற்படி - |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்காக பெற வேண்டியதாக கணக்கீடு செய்யப்படாதிருந்த இறைச்சி கடை வாடகை பெறுவனவு ரூபா 1,653,175 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு இருந்தது. | பதில் அளிக்கப்பட வில்லை | - மேற்படி - |
| (உ) | நிதிக் கூற்றுகளுளில் கடன் கொடுத்தோரை கணக்கீடு செய்யும் போது 03 கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 419,815 குறைத்தும் 04 கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 54,665 கூடுதலாகவும் | - மேற்படி - | - மேற்படி - |

காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2003 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 2,065,714 தொகை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 கணக்காய்வு தொடர்பான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இனங் காணப்படாத மீதிகள் | **40,932,285** | இனங்காணப்படாத மீதிக்காக அங்கீகாரம் மற்றும் விரிவான அட்டவணை | விரைவில் தீர்வு செய்து சமர்ப்பிப்பதாக | உரிய அங்கீகாரம் மற்றும் விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 28 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் பரிசோதனை செய்வதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்கம் மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய 01/2000 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்கு உரிய 07 வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் என்பன வாகன உடலில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் அரச இலட்சிணை மற்றும் நிறுவனத்தின் பெயர் வரும் வகையில் பதிவு செய்யப்படாத வாகனங்களில் அதனை குறிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.7.2 வரி தேவைப்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய பெறுமதி சேர் அடிப்படைதான வரி மீதியாக ரூபா 1,278,234 இனங்காணப்படாத மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்தன. | ரூபா 1,278,234; வெட் மீதி தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து விசாரித்து எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,263,400 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,698,962 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 100,000,000 | 92,623,581 | 86,617,771 | 79,421,106 | 93,000,000 | 93,136,471 | 80,591,014 | 75,122,890 |
| (ii) | வாடகை | 11,252,616 | 11,444,682 | 10,435,416 | 10,092,266 | 12,117,142 | 12,117,142 | 9,783,082 | 2,334,060 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 600,000 | 721,000 | 721,000 | - | 601,000 | 601,000 | 601,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 6,521,028 | 5,659,527 | 5,659,527 | - | 6,485,000 | 7,095,252 | 7,095,252 | - |
| | | **118,373,644** | **110,448,790** | **103,433,714** | **89,513,372** | **112,203,142** | **112,949,865** | **98,070,348** | **77,456,950** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மற்றும் வரி ரூபா 79,421,106 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 40,000 இற்கு மேற்பட்ட நிலுவைகளின் பெறுமதி உடைய 45 வீதவரி நிலுவை மீதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 24,668,316 ஆக இருந்தது. | ரூபா 40,000 இற்கு மேற்பட்ட ரூபா 24,668,316 நிலுவை வீத வரியில் ரூபா 5,122,946 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந் நிலுவைத் தொகையில் 2024 மே மாதம் வரையில் ஆதனங்களை தடை செய்தல் நிகழ்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு அறவிடப்பட்டு வருவதாக | நிலுவையான வீதவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குரிய 187 கடைகளில் இருந்து பெறவேண்டிய மீதி ரூபா 7,016,695 ஆக இருந்தது | இந்நிறுவை தொகை ஏற்படுவதற்கு ஒருகொடவத்த அம்பதலே வீதி விரிவாக்க செயற் திட்டத்திற்காக 02 கட்டிட தொகுதிகளை உடைத்த அகற்றப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருந்த காரணமாகும். மேலும் புதிய வியாபார இடங்களை பெற்றுக் கொள்ளும் போது நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வழங்குவதற்கு | மேற்படி - |
| (இ) | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரி களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 120,000,000 ஆக இருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கு மதிப்பீட செய்த ரூபா 120,000,000 ஆன உறுதி பரிமாற்றல் முத்திரைக் கட்டண வருமானமாகும். இவ்வாண்டின் போது (2024) இல் இதுவரை ரூபா 6,781,796.00 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக | பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்களை அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப் படுகின்ற ரூபா 3,706,300,000 மீள்மதிப்பீட்டு பெறுமதியான 21 காணிகளுக்காக உரித்து உறுதி காணப்படவில்லை. | நகர சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் எண்ணிக்கை 39 இற்கு இடையே 5 ஆதனங்களுக்குரிய உரித்துச் சான்றிதழ்கள் மற்றும் திட்டங்கள் காணப்படுகின்றன. 31 ஆதனங்களுக்காக திட்டங்கள் மற்றும் உரித்து சான்றிதழ்கள் இல்லையென்றும் இந்த சபையால் உடமை கொள்ளப்பட்டுள்ள அனைத்து ஆதனங்களையும் நகர சபைக்கு கையளிக்குமாறு உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் பரிந்துரையுடன் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | காணிகள் கையேற்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களின் மைலோ மீற்றர்கள் 05 ஆண்டுகளுக்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக செயற்படாமல் காணப்பட்டன | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது செயற்பாட்டு செயற்படாத நிலைமையில் காணப்படுகின்ற அனைத்து மைலோ மீற்றர்களையும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மைலோ மீற்றர் திருத்தம் செய்யப்பட வேண்டும் |

### 3.2 நிதிய முகாமைத்துவம்

.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடப்பாண்டில் 11 அபிவிருத்தி திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 30,350,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் ரூபா 15,972,880 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல் மற்றும் பண வீக்கம் தொடர்பில் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய சுற்றறிக்கை வழங்கப்பட்டமை காரணமாக அத்தியாவசிய பராமரிப்புக்கான செலவுகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டதுடன் சில அபிவிருத்தி செயற் திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நேர்ந்ததால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக | பாதீட்டு அறிக்கையை செயற்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும் |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக சபைக்கு சொந்தமான JCB பெகோ இயந்திரமொன்று 02 உழவு இயந்திரங்கள் மற்றும் வீல் லோடர் இயந்திரம் ஒன்று செயற்பாடற்று காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கிறேன். JCB இயந்திரத்தினை உத்தேச திருத்த நடவடிக்கைகளுக்காக முகவர் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப் பட்டிருந்த மதிப்பீடு அதிகமாக இருப்பதால் இதற்கான திருத்த வேலைகளுக்காக மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதினாரசபை (கம்பஹாவிற்கு) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | இயந்திரங்கள் விரைவில் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்
### உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டுக்காக சபையின் நிர்மாணங்கள் கைத்தொழில்கள் பொது வசதிகள் மற்றும் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக போதியளவு உள்ள கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை | பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை | உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு செய்ய வேண்டியதுடன் உள்ளக கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டும் |